செய்தி வெளியீட்டு எண்.348 நாள்: 4.7.2009

**இரண்டு வெவ்வேறு சம்பவங்களில்**
**உயிரிழந்த 12 பேரின் குடும்பங்களுக்கும் காயமடைந்த 11 பேருக்கும்**
**மொத்தம் 8 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய்**
**நிவாரண உதவி**

**முதலமைச்சர் கலைஞர் ஆணை**

புதுக்கோட்டை மாவட்டம் மேலச்சிவபுரி கிராமத்தில் அண்மையில் மருது என்ற மருதுபாண்டி என்பவர் தாக்கியதில் 5 பேர் உயிரிழந்தனர். இத்துயர சம்பவம் தொடர்பான செய்தி தமது கவனத்திற்கு வந்ததும், மிகுந்த வேதனையடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அவர்களில் அழகன் என்பவர் தமிழ்நாடு விவசாயத்தொழிலாளர்கள்–விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு நலத்திட்டத்தின் உறுப்பினர் என்பதால், அவரது குடும்பத்திற்கு அத்திட்டத்தின்மூலம் நலத்திட்ட உதவியாக ஒரு இலட்ச ரூபாய் நிவாரண உதவி வழங்கிடவும், சரோஜா, கோபால், மணி என்கிற பழனியப்பன், சுகுமாரி ஆகிய மற்ற நான்கு பேரின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து நிவாரண உதவியாக வழங்கிடவும் இன்று (4.7.2009) ஆணையிட்டுள்ளார்.

அதேபோல, கடந்த சில நாட்களுக்கு முன் திருச்சி மாவட்டம் தாத்தையங்கார்பேட்டையில் வேன் ஒன்று புளியமரத்தில் மோதி ஏற்பட்ட விபத்தில் ஆர்.கணேசன், கே. சுப்பிரமணி, எம்.மூக்கன், டி.லவின்குமார், எஸ்.ரமேஷ், டி.அன்புராஜ், எம். நாகராஜ் ஆகிய 7 பேர் உயிரிழந்ததுடன், 11 பேர் காயமடைந்த துயர சம்பவம் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து மிகவும் வேதனை அடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அவர்களுடைய குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதமும், காயமடைந்த 11 பேருக்கும் தலா 15 ஆயிரம் ரூபாய் வீதமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து நிதியுதவி வழங்கிடவும் இன்று ஆணையிட்டுள்ளார்.

இந்த இரண்டு நிகழ்வுகளிலும் உயிரிழந்த 12 பேரின் குடும்பங்களுக்கும் மொத்தம் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், காயமடைந்த 11 பேருக்கு 1 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம் 8 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 9.